கேலியும், பேச்சுக்களும் பேசுகின்ற வாய்ப்பு இருக்கிறது. பெண்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு உருவாக்கித் தரும் அக்கறையுள்ள நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில் முழுக்க முழுக்க தானியங்கி பால் வழங்கு நிலையங்களில் டோக்கன் கொடுக்க பெண்களே நியமிக்கப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் முன் வந்தால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வெளிநாடுகளில் உள்ள வீடுகளில் மின்சார இணைப்பு போலவே, கேஸ், பால் போன்றவைகளுக்கும் இணைப்பு கொடுத்து வருகின்றார்கள். அதைப்போலவே நம்முடைய தமிழகத்தினுடைய தலை நகரங்களில், மாவட்ட தலைநகரங்களில் எல்லாம் மின்சார இணைப்பு போலவே, பாலையும் இணைப்பு மூலம் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 513, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

513—

ஊனமுற்ற ஏழைக் குழந்தைகளை அரசே தத்து எடுத்து வளர்த்தல்.

*22019—திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊனமுற்ற ஏழைக் குழந்தைகளை அரசே தத்து எடுத்து அவர்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

இல்லை.

1994 மே 4]

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் முன்னேற்றத்திற்கு பாடு படக் கூடிய ஒரே அரசு இன்றைய தினம் அகில உலக அள வில் எடுத்துக் கொண்டால் நம்முடைய புரட்சி தலைவி அரசு தான் என்ற ஒரு சூழ்நிலையில் ஏழைகள், ஊனம் உற்ற குழந்தைகளை தங்களுக்கு பாரமாக கருதக் கூடிய சூழ்நிலை இன்றைய தினம் இருந்து வருகிறது. அந்த ஊனமுற்ற குழந்தைகளுக்கு உணவு அளிப்பதற்கே அவர்கள் கஷ்டப் படுகிற காலத்தில் அந்த ஊனமுற்ற குழந்தைகள் அவர் களுக்கும் பெரும் பாரமாக இருக்கிறார்கள். எனவே, அரசு இதை மீண்டும் மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அரசு தத்து எடுக்குமா என்று கேட்டுக் கொண்டதற்கு நான் இல்லை என்று பதில் சொன்னேன். அரசு அவர்களை தத்து எடுக்க வேண் டிய அவசியம் இல்லை. ஆனால் அப்படி ஆதரவற்ற குழந் தைகளுக்கு. உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு அவர் களை பராமரிப்பதற்கு அரசின் சார்பாக சிறப்புப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அந்த சிறப்புப்பள்ளிகளில் உணவு உடை உறைவிடம் ஆகிய அனைத்தும் இலவசமாக தரப்படுகின்றன. ஆகவே, உடல் ஊனமுற்ற ஏழை குழந்தைகளை அரசு தத்து எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தப் பள்ளி களிலேயே சேர்ந்து அந்தப் பிள்ளைகளை படிக்க வைக்க அரசால் முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏழை எளிய பிள்ளைகள் படிக் கின்ற அந்த ஸ்கூல்களிலே விடுமுறை என்று அறிவித்த உட னேயே அவர்களை வீட்டுக்கு அனுப்புகின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அந்த சூழ்நிலையிலே கூட அந்த இரண்டு மாத காலம் அவர்கள் பெற்றோர்களுக்கு பாரமாக கருதப் படுகிறார்கள். அதேபோல பள்ளிக் கூடத்திலே சேர்க்க முடி யாத நிலையில் இருக்கிற அந்த ஊனமுற்ற குழந்தைகள் ஹேண்டிகேப்ட் பென்ஷன் திட்டத்தின் மூலம் ஏதாவது உதவித் தொகை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கக்கூடிய அளவிற்கு இருக்கிற குழந்தைகளுக்கு அரசு எந்த உதவித் தொகையும் வழங்குவது இல்லை. ஆனால், கடும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு எந்தவிதமான பிரயோஜன மும் இல்லாமல் பெற்றோர்களுக்கு பாரமாக இருக்கிற ஊனம்

உற்ற குழந்தைகளுக்கு அரசால் உதவித் தொகை மாதந் தோறும் வழங்கப்படுகிறது. அந்த உதவித் தொகையை பெறுவதற்கு அந்த குழந்தைகளுக்கு வாய்ப்பு இருக்கிறது. லீவு விட்டால் விடுமுறை நாட்களில் குழந்தைகளை பெற்றோர்களே வந்து அழைத்துச் சென்றால் அவர்களிடத்திலே கொடுக்கிறோம். மற்ற இடங்களிலே விடுதிகள் இருக்கின்றன. அந்த விடுதிகளிலே தங்கி அவர்களை பாராமரிப்பதற்கு உரிய அனைத்து வசதிகளையும் அரசு செய்து தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்ற அந்தப் பிள்ளைகளுக்காக இருக்கிற பள்ளிகள் போதுமானதாக இல்லை என்று நான் கருதுகிறேன். எனவே ஒவ்வொரு தொகுதி வாரியாக அப்படிப்பட்ட பள்ளிகளை ஆரம்பிப்பது மட்டும் அல்லாமல் அதிலே பயின்றதற்கு பின்னால் நிரந்தரமாக ஊனமுற்ற அந்த பிள்ளைகளுக்கு வருங்காலத்திலே வேலை வாய்ப்பை நிரந்தரமாக உருவாக்குகின்ற அளவுக்கும் அதேபோன்று சிறிது அளவு ஊனமுற்றவர்களாக இருந்தாலும் கூட வேலை வாய்ப்பிலே முன்னுரிமை கொடுக்கின்ற வகையிலே இந்த சமூக நலத்துறை மூலமாக வேலை வாய்ப்புகளை அரசு உருவாக்கித் தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி வாரியாக ஊனம் உற்றவர்களின் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் ஊனமுற்ற அந்தக் குழந்தைகள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்து அதற்கு உரியவகையிலே அந்த ஊனமுற்றோர் பள்ளிகளை அரசு ஆரம்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசினுடைய பள்ளிகள் மட்டும் அல்லாமல் பல்வேறு தொண்டு நிறுவனங்களின் பள்ளிகளும் இருக்கின்றன. அதற்கு மானியம் மாநில அரசும் வழங்குகிறது. மத்திய அரசும் வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அவர்களால் எந்த எந்த வேலைகளைச் செய்ய முடியுமோ அதற்குரிய வாய்ப்புகளை அளிக்கின்றோம். மற்றவர்களுக்கு சுய தொழில் செய்வதற்குரிய வாய்ப்புகளை, சமூக நலத்துறை மூலம் முடிந்த வரையில் செய்து கொள்ள உதவி அளித்து வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்கு பின்னால் நாற்காலிகளை பின்னக்கூடிய 22 புதிய பதவிகளை ஏற்படுத்தி அதில் உடல் ஊனமுற்றவர்களுக்கும் கண் பார்வை அற்றவர்

1994 மே 4]

களுக்கும் வேலை வாய்ப்புகளை அளிக்க வேண்டும் என்று உத்திர விட்டுள்ளார்கள். அதைப்போலவே ஆண்டுதோறும் புதிய வேலை வாய்ப்புகளை அவர்களுக்காக சமூகநலத்துறை உருவாக்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாக உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு அரசு உதவித் தொகை வழங்குகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் தமிழகத்தில் எத்தனை பேருக்கு அந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது? உடல் ஊன முற்ற குழந்தைகள் என்று பார்க்கின்றபோது பெற்றோர் களே அந்த குழந்தைகளைப் பார்த்து வெறுத்து ஒதுக்கு கின்ற நிலை இருக்கிறது. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் சென்று பார்க்கின்றபோது, ஹேண்டிகேப்டு பெர்ஸன் கோட்டா என்று வைத்திருக்கிறோம். அங்கே போய் பார்க் கின்றபோது 10, 15 ஆண்டுகளாக வேலைவாய்ப்பு அலு வலகத்தில் பதிவு செய்துவிட்டு வேலைக்காக அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, தங்கள் குடும் பத்திற்கு சுமையாக இருக்கிறோம் என்ற எண்ணம் இருக் கிறது. அதைப் போக்குகின்ற வகையிலே ஹேண்டிகேப்டு பெர்ஸன் என்று வருகின்றவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத் திற்குச் சென்றவுடன், உடனே அவர்களுக்கு ஏதேனும் ஒரு வேலை கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையை 16,720 குழந்தைகள் பெற்று இருக்கிறார்கள். 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தக் குழந்தைகள் அந்த உதவித் தொகைகளை பெற்றிருக்கிறார்கள். கடும் ஊன முற்றவர்கள் யார் விண்ணப்பித்தாலும் அவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அந்தக் குழந்தைகளுக்கு உடனடியாக உதவியை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட் டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய பெட்டிஷன் எதுவும் நிலுவையில் இல்லாமல் உடனடியாக விசாரிக்கப்பட்டு அவர் களுக்கு வழங்கப்படுகிறது என்பதை பேரவைத் தலைவர் மூலமாக உறுப்பினர்னருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக வேலை வாய்ப்புத் துறையில் 3 சதவீதம் மட்டு மே பெற்றுக் கொண்டிருந்த அவர்கள் இன்றைக்கு 5 சதவிகி தத்தை அரசு எடுக்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்பில் அவர்களுக்கு பல்வேறு பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக் கிறது. அவர்களுக்குரிய வேலை வாய்ப்புகள் வருகின்றபோது தான அந்த வேலை வாய்ப்புகளைத் தரவேண்டியிருக்கிறது.

அண்மையிலேகூட பல பேருக்கு பதவி உயர்வை பார்வையற்றோரின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் புதிய பணியிடங்களை ஏற்படுத்தி கல்வித் துறையின் மூலமாக கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குரிய வேலை வாய்ப்புகள் வரும்போது நிச்சயமாக சமூக நலத்துறை மன முவந்து உடனடியாக அந்த பணி இடங்களை ஊனமுற்றவர்களைக் கொண்டு மட்டுமே நிரப்பும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 514, திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

514—

வனத்துறையில் சமூக வன ஊழியர்களையும், தோட்டக் காவலர்களையும் பணி நிரந்தரம் செய்தல்.

*14427— திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

வனத்துறையில் வேலைவாய்ப்பு அலுவலக அனுமதியின்றி பணியில் அமர்த்தப்பட்ட கிராம சமூக வன ஊழியர்களையும், தோட்டக் காவலர்களையும், நிரந்தரமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனத்துறையில் வேலை வாய்ப்பு அலுவலக அனுமதியின்றி பணியில் அமர்த்தப்பட்ட கிராம சமூக வன ஊழியர்களையும் தோட்டக் காவலர்களையும் நிரந்தரப் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாடே போற்றி புகழும் தமிழக மக்களை காக்கும் காவல் தெய்வமாக விளங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் வனத்துறையில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.